# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1487/8 - 2007 මාර්තු 05 වැනි සඳුදා - 2007.03.05

1487/8 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

*18 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனாக பதில் நிதி, அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய ஆகிய நான், இக்கட்டளை மூலம்,*

(அ) இந்தக் கட்டளைக்கான அட்டவணையின் பாகம் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட உள்ளாதாரக் கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பிலான செயற்பாடுகளாவன அப்பிரிவின் (2) ஆம் உபபிரிவின் நோக்கங்களுக்கான செயற்பாடுகளாக இருத்தல் வேண்டுமெனவும், அத்துடன்

(ஆ) அத்தகைய ஏதேனும் செயற்பாடொன்றில் ஈடுபட்டுள்ள பொறுப்பு முயற்சியொன்றிலிருந்து கம்பனி ஒன்றின் இலாபங்களும் வருமானமும் அத்துடன் அந்த அட்டவணையில் பாகம் II இன் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட தொகையிலும் குறைவாகவில்லாத தொகையான முதலீடும் அத்துடன் அத்தகைய முதலீடு அத்தகைய பொறுப்பு முயற்சியின் வர்த்தக செயற்பாடுகள் ஆரம்பத்திலிருந்து ஒரு ஆண்டுக்குப் பிந்தாமல் முற்றாக செய்யப்பட்டதாயுமிருப்பின் அந்த அட்டவணையின் பாகம் II நிரல் II இல் உள்ள நேரொத்த பதிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதிக்கு வரிவிலக்கு வழங்கப்படுதல் வேண்டுமெனவும் தீர்மானிக்கின்றேன்.

ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய,
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு,
2007, மாச்சு 01.

**அட்டவணை**

*பாகம் I*

***செயற்பாடுகள்***

1. ஏதேனும் விமான நிலையம், துறைமுகம், பெருந்தெரு அல்லது புகையிரத வீதியினை அபிவிருத்தி செய்தல்.
2. ஏதேனும் கைத்தொழிற் பண்ணையின் அபிவிருத்தி.
3. ஏதேனும் குதமொன்றினை அல்லது களஞ்சியத்தின் அபிவிருத்தி.
4. ஏதேனும் துப்பரவாக்கல் ஏற்பாட்டினை அல்லது திண்மக் கழிவு முகாமிப்பு முறையொன்றினை வழங்குதல்.
5. மின் உற்பத்தியாக்கல், நிலைமாற்றல் அல்லது பகிர்தல்.
6. நீர்சேவைகளின் அபிவிருத்திகள்.
7. நகர வீடமைப்பு அல்லது நகர மைய அபிவிருத்தி
8. வைத்தியசாலைகளை நிர்மாணித்தல்

**பாகம்** II

| *நிரல் I* *முதலீட்டின் தொகை* *(ரூபா மில்லியன்)* | *நிரல் II* *வரிவிலக்குக் காலப்பகுதி* *(ஆண்டுகள்)* |
|---|---|
| *1000* | *06* |
| *2500* | *08* |
| *5000* | *10* |
| *7500* | *12* |

இந்த கட்டளையின் நோக்கங்களுக்காக முதலீடு என்பது ஒப்புரவினால் அல்லது கடனினால் நிதிப்படுத்தப்பட்ட பொறுப்பு முயற்சியின் மொத்தச் செலவாகும்.

*3-602*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.